DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

Case No. CC.No.403/2022

Deposition of **PW-1/ LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயவேல் | Age | : | 43 |
| Father's / Husband Name | : | முத்துபழனியாண்டி | Religion | : | இந்து |
| Village | : | போடிநாயக்கனூர் | Calling | : | விவசாயம் |
| Taluk | : | போடிநாயக்கனூர் | Caste | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **23 day October 2025**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் போடிநாயக்கனூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் . எனக்கு சொந்தமாக கொட்டகுடி கிராமத்தில் 4 ஏக்கர் தோட்டம் உள்ளது அதில் இலவம்பஞ்சு மரம , எலுமிச்சை, மாங்காய் ஆகியவற்றை பயிரிட்டுள்ளேன் . 2017 ஆம் வருடம் காலையில் 5, 6 நபர்களை வேலைக்கு எனது தோட்டத்திற்கு சென்றபோது அங்கு ராஜா , அவரது மகன் விஜயகுமார் மற்றும் சுருளி மூன்று பேரும் எனது தோட்டத்தில் உள்ள வீட்டில் உட்கார்ந்து இருந்தார்கள். நாங்கள் தோட்டத்திற்கு சென்ற போது ராஜா எனது அம்மாவை அசிங்கமாக பேசி எங்களை தோட்டத்திற்குள் வரக்கூடாது என்று சொல்லியும் தோட்டம் அவர்களுக்கு சொந்தமானது என்று சொல்லியும் பிரச்சனை செய்தார்.

2) அப்போது என்னுடன் வேலைக்கு வந்த பவுன் ,சரவணன் இன்னும் சிலர் அவர்களிடம் வெகு நாட்களாக தோட்டத்தை ஜெயவேள்தான் பராமரித்து வருகிறார் என்றும் நீங்கள் எதற்காக பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டபோது ராஜா , பவுன் என்பவரை அடித்து கீழே தள்ளி விட்டார் . குமார் கையில் வைத்திருந்த கம்பை கொண்டு சரவணன் என்பவரை அடித்தார். மேலும் குமார் கையில் வைத்திருந்த அருவாளை கொண்டு எங்களை வெட்ட வந்தார். நான் சூழ்நிலை சரியில்லை என்று சொல்லி அங்கிருந்து வந்து விட்டேன் .அதன்பின் குரங்கணி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன தற்போது என்னிடம்

காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் ( **புகார் அரசு சான்று ஆவணம் ஒன்றாக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தனர் .

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

3) சம்பவ இடத்திலிருந்து குரங்கணி காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் ஐந்து நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் இரு சக்கர வாகனத்தில் செல்ல முடியாது சம்பவ இடத்திலிருந்து குரங்கணி காவல் நிலையம் 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது . இருசக்கர வாகனத்தில் 4 கிலோ மீட்டரும், நடந்து 2 கிலோமீட்டர் செல்ல வேண்டும் சம்பவ இடத்திலிருந்து நடந்தும் இருசக்கர வாகனத்தில் சென்றும் காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டும் என்றால் சுமார் அரை மணி நேரத்தில் செல்லலாம் . எனக்கும் எதிரிகளுக்கும் இடையே போடி உரிமையியல் நீதிமன்றத்திலும் , சார்பு நீதிமன்றத்திலும் சிவில் வழக்கு நடந்து முடிந்தது என்றால் சரிதான்.

4) என் பெயரில் பட்டா ஏற்படுவதற்கு முன்பாக 1ம் எதிரியின் தாயார் பெயர் சீனியம்மாள் மற்றும் அவரது அத்தை மாயக்கால் பெயரிலும் பட்டா இருந்தது என்றால் சரியல்ல . எனக்கு முன்பாக செல்லையா என்பவரின் பெயரில் பட்டா இருந்தது . செல்லையா என்பவரின் பெயரில் பட்டா ஏற்படுவதற்கு முன்பு எதிரிகளின் தாயார் பெயரில் பட்டா ஏற்பட்டதா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது .போடி உரிமையியல் நீதிமன்றத்திலும் சார்பு நீதிமன்றத்திலும் நான் 1ம் எதிரியின் தாயார் மற்றும் அத்தை பெயரில் என் பெயரில் பட்டா ஏற்படுவதற்கு முன்பாக அவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துவிட்டு தற்போது மாறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல .பவுன் மற்றும் சரவணன் என்பவர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவ சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல போடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம் . பவுன் மற்றும் சரவணனுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் பொய்யாக அவர்களுக்கு சிகிச்சை பெற்றதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) 2016 ஆம் வருடத்தில் நான் 1ம் எதிரியை தாக்கியதாக அவர் குரங்கணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான் . அது சொத்து சம்பந்தமான பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தின் வாயிலாக தீர்த்துக் கொள்ளும்படி அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். இதே சம்பவத்தில் என் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு நடந்து முடிந்தது என்றால் சரிதான் அதில் நான் பைன் கட்டி உள்ளேன்.போலீசார்

அருவாளை கைப்பற்றினார்களா என்றால் இல்லை . நான் சொல்வது போல் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றும் நான் அவர்களை தாக்கி அதனால் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் அந்த வழக்கில் இருந்து தப்பித்துக் கொள்ள எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல . நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றும் எதிரிகள் அனுபவம் செய்து வரும் நிலத்தை அபகரிக்க வேண்டும் என பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2025.10.23 17:55:11 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.